# மெட்ரோவில் சீருந்து சேவை

சென்னை, ஆக. 6–

மெட்ரோ ரயில் நிலையத்தில், சீருந்து சேவை நேற்று துவங்கப்பட்டது.

மெட்ரோ ரயில் பயணியர், நிலையத்தில் இருந்து, பிற இடங்களுக்கு செல்ல ஏதுவாக, சீருந்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வசதியை, அமைச்சர் எம்.சி.சம்பத், நேற்று துவக்கி வைத்தார்.

ஒரு சீருந்தில், ஆறு பேர் பயணிக்கலாம். இதில், 6 – 8 கி.மீ., பயணிக்க, 10 ரூபாய் கட்டணம். 20 நிமிட இடைவெளியில், சீருந்து இயக்கப்படும். கட்டணத்தை, மெட்ரோ ரயில் டிராவல் கார்டு, சி.எம்.ஆர்.எல்., செயலி வழியாக செலுத்தலாம்.

இவ்வசதி, முதல் கட்டமாக, சென்ட்ரல், அரசினர் தோட்டம், எல்.ஐ.சி., ஆயிரம் விளக்கு, டி.எம்.எஸ்., நிலையங்களில், அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. படிப்படியாக, மற்ற நிலையங்களிலும் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

மத்திய அரசின், 'எனர்ஜி எபிஷியன்சி சர்வீசஸ் லிமிடெட்' நிறுவனம் சார்பில், மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்கு, 'சார்ஜிங்' நிலையங்கள், 26 மெட்ரோ ரயில் நிலையங்களில் துவங்கப்பட உள்ளன.

முதற்கட்டமாக, நந்தனம் நிலையத்தில், இவ்வசதி துவங்கப்பட்டுள்ளது. அண்ணா நகர் கிழக்கு, ஐகோர்ட், அசோக்நகர், ஆலந்துார் நிலையங்களில், இம்மாத இறுதிக்குள் துவக்கவும், மற்ற நிலையங்களில், படிப்படியாக துவக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.



■ நந்தனம், மெட்ரோ ரயில் நிலையத்தில், புதிதாக துவக்கப்பட்ட இணைப்பு சீருந்து.